மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் உள்ள நாமக்கல் வட்டம் மற்றும் ராசிபுரம் வட்டம் ஆகிய இரு வட்டங்களை சீரமைத்து, பரமத்தி வேலூர் மற்றும் கொல்லிமலை ஆகிய வட்டங்களை உருவாக்குவது குறித்த கருத்து அரசின் ஆய்வில் உள்ளது. அடுத்த கேள்வி வரத் தேவையில்லை என்ற அடிப்படையில் விளக்கமாகவும் தெரிவித்து விடுகிறேன். சேலம் மாவட்டத்தில், நாமக்கல் மற்றும் ராசிபுரம் வட்டங்களைப் பிரித்து பரமத்தி வேலூர் மற்றும் கொல்லிமலை வட்டங்கள் உருவாக்கும் செயற்குறிப்பு 1978ஆம் ஆண்டிலேயிருந்து அரசின் பரிசீலனையில் இருந்துவருகிறது. இந்தத் திட்டத்தை 1979 ஆம் ஆண்டிலேயே அரசு ஒப்புக்கொண்டாலும் இக்கருத்து நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. புதிய பரமத்தி வேலூர் வட்டத்தில் தலைமையிடத்தை எங்கு நிறுவுவது என்பது பற்றியும், புதிய வட்டங்களை ஏற்படுத்தவேண்டிய பணிஇடங்கள் இன்ன பிறவற்றை ஆய்வு செய்யாமலேயே வட்டங்களைப் பிரிப்பது குறித்து மட்டும் முடிவு எடுக்கப்பட்டமையாலும் பின்னர் ஊராட்சி ஒன்றியங்கள் தேர்தல்கள் காரணமாகவும், இடங்களைப் பிரிப்பது தொடர்பான ஆணைகளை வெளியிட முடியவில்லை. ஆயினும் இப்போது வட்டங்களின் பிரிவினை குறித்தும், புதிய வட்டங்கள் தலைமையிடங்கள் எவை என்பது குறித்தும் மக்கள் கருத்தறிய மாவட்ட அரசுகளின் சரியான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கு மக்களிடம் இருந்து மறுப்பு ஏதும் இல்லை. அவ்வறிக்கையின்படி பரமத்தி வேலூர் தலைமையிடமாகக் கொண்டு பரமத்தி வேலூர் வட்டமும் மற்றும் வாழவந்திநாட்டை தலைமை இடமாகக் கொண்டு கொல்லிமலை வட்டமும் அமையும். 18 வயது பூர்த்தியானவர்கள் அனைவரையும் வாக்காளர் பட்டியலிலே சேர்க்கும் பணி காரணமாக மாவட்டங்கள், வட்டங்கள் பிரிவினை செய்ய பொதுத் (தேர்தல்) துறை தடை ஆணை பிறப்பித்துள்ளதால் அரசு செயற்குறிப்பினை நிலுவையில் வைத்துள்ளது. இத்தடை ஆணை விலக்கப்பட்டதும் மேல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். I hope I have answered your question properly and completely.

நாகல்குளம் — ஆலங்குளம் கால்வாய்.

113—(*வினா எண் 193)—**திரு. எஸ். எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, நாகல்குளத்திலருந்து ஆலங்குளம் வரை உள்ள கால்வாயில் தண்ணீர் வரும்போது சில பகுதிகளில் தண்ணீர் தேங்கி கரை உடைந்து சேதம் ஏற்படுத்துவது அரசுக்குத் தெரியுமா ?

1989 ஏப்ரல் 24] [திரு. எஸ். எஸ். ராமசுப்பு]

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உடைப்பு தற்காலிகமாக அடைக்கப்பட்டுள்ளது.

மேற்கே செல்லும் ஆறுகளின் நீரை கிழக்கே திருப்பி விடுதல்.

114—(*வினா எண். 548)—திரு. பி. மாரப்பன், திரு. கே. ஏ. செங்கோட்டையன், திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம், திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்கே செல்லும் ஆறுகளின் நீரை கிழக்கே திருப்பி விடும் நோக்குடன் சமீபத்தில் கேரளா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. பி. மாரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கே செல்லும் நதிகளை கிழக்கு நோக்கி, தமிழகத்தில் முழுமையாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற பகுதிகளுக்கு குறிப்பாக காங்கேயம் தொகுதிக்கு, குறிப்பாக பெரியார், கோவை போன்ற மாவட்டத்தைச்சேர்ந்த பகுதிகளுக்கு திருப்பி அவற்றை நஞ்சைப் பகுதிகளாக மாற்ற வேண்டும. அதற்கு கேரளாவில் வீணாக செல்லும் நீரை இங்கே திருப்புவதற்காக திரும்பவும் கேரள அரசுடன் பேசவேண்டும். குறிப்பாக இன்னும் சொல்லப் போனால் இந்த அரசுடன் அனுசரணையான அரசு கேரளாவில் இருக்கிற காரணத்தால் இத்தகைய ஒரு நல்ல சூழ்நிலையில், அந்த அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, தமிழகத்தை தஞ்சை மாவட்டத்தைப் போல ஆக்க வேண்டும். குறிப்பாக கோவை, பெரியார் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள சிலபகுதிகளையும் நஞ்சை நிலங்களாக மாற்றுவதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுக்குமா ? அப்படி முயற்சி எடுக்கின்றபோது என்னுடைய தொகுதியில், காங்கேயம் தொகுதியில் எத்தனை ஆயிரம் ஏக்கர்கள் பாசன வசதி பெறும் என்பதை அறிய விரும்புவதோடு, இப்போது காங்கேயம் தொகுதி முழுவதும் மிக . . .